# துவாக்குடி நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 29.06.2018 | | 2018ம் ஆண்டு ஜூன் மாதம் 29–ம் தேதி வெள்ளி கிழமை மாலை 04.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம் நடைபெறும்.<br>**தனி அலுவலர்,**<br>**துவாக்குடி நகராட்சி.** | |
| 29.06.2018 | 185 | **பொருள் எண். 1**<br>2018–19ம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி (TURIP 2018–19) திட்டத்தின் கீழ் பழுதடைந்த தார் சாலைகளை புதுப்பிக்கவும் மற்றும் புதிதாக தார்சாலைகள் அமைக்கவும் கீழ்கண்ட பணிகளுக்குரிய மதிப்பீடுகள் தயார் செய்து மான்யம் பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது. | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | வார்டு எண் | சாலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 9, 10, 11 மற்றும் 15 | காட்டுமாரியம்மன் கோவில் தெரு, சமூக நலக்கூடம் சாலை மற்றும் முத்துராமலிங்க தேவர் சாலையில் தார்சாலை அமைத்தல், மற்றும் அய்யணார்கோவில் கிழக்கு மற்றும் மேற்கு பகுதி குறுக்குத் தெருக்கள், வசந்தம் நகர் 1, 2, 3 மற்றும் 4 தெருக்கள், பட்டம்மாள் கோவில் சந்து மற்றும் அண்ணாநகர் மெயின் மற்றும் குறுக்குத் தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 100.00 |

**அ.கு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். இ1 / 800 / 2018**

<table>
<tr>
<td>29.06.2018</td>
<td>186</td>
<td>
<u>பொருள் எண். 2</u><br>
துவாக்குடி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை மேற்கொள்ள கீழ்கண்ட பணிகள் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>தள்ளுவண்டி மற்றும் அதற்கு தேவையான பின்கள் வாங்குதல்</td><td>5.00</td></tr>
<tr><td>2</td><td>திடக்கழிகளை கொண்டு உரம் தயார் செய்யும் மையத்திற்கு மூன்று எண்ணிக்கை மின் மோட்டார் வாங்குதல்</td><td>9.90</td></tr>
</table>
அ.கு:- 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். எச்1 / 1132 / 2018
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>29.06.2018</td>
<td>187</td>
<td>
<u>பொருள் எண். 3</u><br>
துவாக்குடி நகராட்சியின் பொது நிதி 2018–19 –ன் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 26.06.2018–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப் புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>துவாக்குடி நகராட்சி 1–வது வார்டு சிவன் கோவில் அருகில் உள்ள கருமாதி மண்டபம் அருகில் கழிப்பிடம் கட்டுதல்</td><td>9.50</td><td>ஆர். சிவக்குமார்<br>எம். பொன்னுசாமி</td><td>மதிப்பீட்டை விட 0.09 % குறைவு<br>மதிப்பீட்டை விட 0.58 % அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>துவாக்குடி நகராட்சி 5–வது வார்டு ராவுத்தாண்மேடு பழத்தோட்டம் அருகில் சிஎஸ்ஐ மருத்துவமனை செல்லும் சாலை யில் அங்கன் வாடி அருகில் சுற்றுச்சுவர் அமைத்தல்</td><td>9.90</td><td>ஆர். சிவக்குமார்<br>எம். பொன்னுசாமி</td><td>மதிப்பீட்டை விட 0.07 % குறைவு<br>மதிப்பீட்டை விட 0.73 % அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : – குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதித்து வேலை உத்திரவு வழங்கலாம்.<br>
ந.க.எண். 721 /2018/இ1
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 29.06.2018 | 188 | <u>**பொருள் எண். 4**</u><br>துவாக்குடி நகராட்சி அலுவலக கணினி பிரிவில் பயன்படுத்தப்பட்டு வந்த 10 கேவிஏ யுபிஎஸ் 18 பேட்டரிகள் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் மின் தடை ஏற்படும் போது அலுவலக கணினி பயன்பாட்டில் தடங்கல்கள் ஏற்படுவதாலும் மேலும் பொது மக்களுக்கு வரி ரசீதுகள் வழங்கும் சேவை மையத்தின் பணிகள் தடைபடுவதாலும்புதியதாக 18 பேட்டரிகள் சப்ளை செய்து பொருத்தி கொடுக்க ரூ. 1,10,000/– க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கும், மேலும் இப்பணி நகராட்சியின் அத்தியாவசிய அலுவலக பணியாக உள்ளதால் உள்ளூர் விலைப்புள்ளி கோரி நகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் பணி மேற்கொண்டதற்கும் தொகை ரூ. 1,06,524/– வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 423/ இ1 / 2018** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 29.06.2018 | 189 | <u>**பொருள் எண். 5**</u><br>துவாக்குடி நகராட்சி அலுவலக கட்டிடத்தின் மும்முனை இணைப்பு கேபிள் பழுதடைந்து மின்கசிவு ஏற்பட்டு அடிக்கடி நகராட்சி அலுவலக மின்இணைப்பு தடைபட்டு நகராட்சி அலுவலக கணினி பயன்பாட்டில் தடங்கல்கள் ஏற்படுவதாலும் மேலும் பொது மக்களுக்கு வரி ரசீதுகள் வழங்கும் சேவை மையத்தின் பணிகள் தடைபடுவதாலும் புதியதாக கேபிள் வயர்கள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கி பொருத்துவதற்கு ரூ. 20,000/– க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கும், மேலும் இப்பணி நகராட்சியின் அத்தியாவசிய அலுவலக பணியாக உள்ளதால் உள்ளூர் விலைப்புள்ளி கோரி நகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் பணி மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 483/ இ1 / 2018** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 29.06.2018 | 190 | <u>**பொருள் எண். 6**</u><br>மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் துவாக்குடி நகராட்சி பகுதியில் பேருந்து நிறுத்தத்திற்கு நிழற்குடை அமைப்பதற்கு தேசிய நெடுஞ்சாலைத்துறையின் அனுமதி 11.04.2018 –ல் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து பணி மேற்கொள்ள உள்ள இடத்தின் மண் பரிசோதனை செய்வதற்கு தேசிய தொழில் நுட்ப கழகத்திற்கு கடிதம் அனுப்பபட்டதை தொட.ந்து மண் பரிசோதனை செய்ய இயலாது என தேசிய தொழில் நுட்ப கழகத்தில் தெரிவித்ததை தொடர்ந்து, மேலும் இப்பணி திட்டப்பணியாக உள்ளதால் பணி முடித்து பணி முடிவறிக்கை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு சமர்பிக்க வேண்டும் என்பதால் அவசர அவசியம் கருதி மண் பரிசோதனை செய்வதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி நகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் பணி மேற்கொண்டு தொகை ரூ. 7000/– வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 750/ இ1 / 2018** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

____________ X ____________